








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 06.12.2019

Main Office @

**Weshine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்


We Shine Academy TM








World Health
Organization

## தமிழக நிகழ்வுகள்

- **தமிழக கடலோர பாதுகாப்பு குழுமத்துக்கு மத்திய அரசின் தேசிய கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பணிக்கான விருது டிசம்பர் 18-ஆம் தேதி தில்லியில் நடைபெறும் விழாவில் வழங்கப்படுகிறது.** இந்த விருது தமிழக காவல் துறைக்கு முதல் முறையாக கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.
  - திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி வரை 14 மாவட்டங்களுக்கு உட்பட 1.076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரைப் பகுதியைப் பாதுகாக்கும் பணியை தமிழக கடலோர பாதுகாப்பு குழுமம் (Tamil Nadu Coastal Security Group) செய்து வருகிறது.

We Shine Academy™

## தேசிய நிகழ்வுகள்

- பெருநிறுவனங்களுக்கான வரியை குறைக்க வகைசெய்யும் **'வரிகள் சட்டத்திருத்த மசோதா – 2019'** நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
  - இந்த மசோதா மக்களவையில் ஏற்கெனவே நிறைவேறிவிட்ட நிலையில், மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. எந்தவொரு மாற்றமும் இன்றி அந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- 2019 உலக மலேரியா அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் (WHO – World Health Organization) வெளியிடப்பட்டுள்ளது.
    - உலகளவில், **2018 ஆம் ஆண்டில் 228 மில்லியன் நபர்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.**
    - அதிக எண்ணிக்கையிலான மலேரியா நோய் பாதிப்பானது உலகில் ஆப்பிரிக்கப் பிராந்தியத்திலும் தென்கிழக்கு ஆசியாவிலும் பதிவாகியுள்ளன.
    - நைஜீரியாவில் அனைத்து வித மலேரியா நோய் பாதிப்பானது 24% என்ற அளவில் மிக அதிக பாதிப்பு மிக்கதாக உள்ளது?

- பள்ளி மாணவர்கள் தங்கள் பாடங்களை சிறந்த திறமையான முறையில் புரிந்து கொள்ள உதவுவதற்காக **“மது” என்ற மின்னணு முறையிலான ஒரு கற்றல் கைபேசிச் செயலியை ஒடிசா மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.**
    - ஒடிசாவின் முதலாவது பட்டதாரி மற்றும் வழக்குரைஞரான ‘உத்கல கௌரபா’ மதுசூதன் தாஸ் என்பவரின் நினைவாக இந்த செயலிக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
    - இவர் “குலாபுருதா” என்று அழைக்கப்படுகிறார். அதாவது ஒடிசாவில் இதற்கு மிகவும் மிகவும் மூத்த மனிதர் என்று பொருள்படும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்

- புவி கண்காணிப்பு மற்றும் ராணுவ பாதுகாப்புக்கு உதவும் ரிசாட்-

2பி ஆர்1 செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) டிசம்பர் 11-ஆம் தேதி விண்ணில் ஏவ உள்ளது.

- **ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்தின் முதல் ஏவு தளத்திலிருந்து பி.எஸ்.எல்.வி-சி48 ராக்கெட் ஏவப்பட உள்ளது.**
- ராணுவப் பாதுகாப்பு கண்காணிப்புக்கு உதவும் கார்டோசாட்-3 செயற்கைக்கோளை கடந்த நவம்பர் 27-ஆம் தேதி வெற்றிகரமாக விண்ணில் ஏவிய இந்திய விண்வெளி ஆய்வு மையம், ஒரே வாரத்தில் அடுத்த செயற்கைக்கோள் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.
- ரிசாட் 2பி ஆர்1 செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி.-சி48 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட உள்ளது. இது இஸ்ரோ அனுப்பும் 50-ஆவது பி.எஸ்.எல்.வி. ராக்கெட் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் வியாழக்கிழமை நிலவரப்படி 62 தங்கம், 41 வெள்ளி, 21 வெண்கலம் என 124 பதக்கங்களுடன் முதலிடத்தில்** நீடித்து வருகிறது இந்தியா.
    - நேபாளத் தலைநகர் காத்மாண்டு, பொக்ராவில் 13-ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
    - இதன் ஒரு பகுதியாக வியாழக்கிழமை மகளிர் கால்பந்து போட்டியில் இலங்கையை வீழ்த்தி அபாரவெற்றி பெற்றது

இந்தியா.

## திருக்குறள்

**குறள் எண்** : **39**

அதிகாரம் : அறன் வலியுறுத்தல்

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புறத்த புகழும் இல.**

**விளக்கம்** : அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.

We Shine Academy™